நகர் ஊரமைப்பு துறை (DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்
கன்னிவாடி பேரூராட்சி.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கன்னிவாடி பேரூராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண்-401/2-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : (1:500)(1செ.மீ = 5.0மீ) (திட்டமில்லா பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: MZLJKSW, நாள்-22.03.2025





குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு : 4.00ஏக்கர் (அ) 16200.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 72 (EWS மனைகள் உட்பட)

மனைப்பிரிவின் பரப்பு 1 ஹெக்டேருக்கு அதிகமாக இருப்பின்

(i) நலிவடைந்த பிரிவினருக்காக ஒதுக்கப்பட வேண்டிய EWS மனைகளின் பரப்பு — (மனைப்பிரிவின் பரப்பு-மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x (10/100) (16200.00-3776.33)x10/100 = 1242.36ச.மீ

(ii) நலிவடைந்த பிரிவினருக்காக ஒதுக்கப்பட்ட EWS மனைகளின் பரப்பு (EWS மனை எண்கள்: 10-17,42-49,68-70) : (19 மனைகள்) 1522.59ச.மீ (12.25%)

மனைப்பிரிவின் எல்லை :

நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை :

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

i. மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 3776.33ச.மீ

ii. பூங்கா

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (16200.00-3776.33) x 10% = 1242.36 ச.மீ

ii) ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு : 1244.26 ச.மீ 10.01%

iii. பொது உபயோகம்

A) உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (16200.00-3776.33)x (0.5/100) = 62.11ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 62.65 ச.மீ(0.50%)

B) TANGEDCO- க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (16200.00-3776.33)x (0.5/100) = 61.11ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 72.65 ச.மீ(0.58%)

கட்டிட வரம்பு: 9.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0 மீ முதல் 18.0 மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு: 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்.
12.0மீ முதல் 30.5மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5mx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் :04.02.2019 (ம)அரசாணை எண் :16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்துறை நாள்: 31.01.2020 -ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020- ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி,மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளை மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், கன்னிவாடி பேரூராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியபட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படகூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை (அ) உதவி இயக்குநர் திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. மனை இடத்தின் உள்ளே செல்லும் குறைந்த மின் அழுத்த/ உயர் மின் அழுத்த கம்பிப்பாதையினை உத்தேச மனைப்பிரிவு சாலை போக்கிற்கேற்ப மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வரைபடநகலோடு, நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x1.2மீ என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. குறைந்த வருவாய் பிரிவினருக்கான EWS மனைகள் 10-17,42-49 மற்றும் 68-70 ஆகியவற்றை மனை உட்பிரிவு மற்றும் மனை ஒருங்கினைப்பு செய்யக் கூடாது.
9. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலையாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து கன்னிவாடி பேரூராட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

SWP/DTCP/TIRUPPUR LAYOUT APPROVAL NO- 78/2025

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்

ழியன்
வரைவாளர் நிலை- III

Signature valid
Signed by: Assistant Director
Location: Tiruppur
Date: 2025.05.07 18:47:25

Signature valid
Signed by: Executive Officer
Location: Tiruppur
Date: 2025.05.08 26 17:33:22

சி.பார்வதி
திட்ட உதவியாளர்/மேற்பார்வையாளர்.